# வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

இணைந்து வழங்குபவர்கள்

பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை

ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்

ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம்

MSSRF
Science for Sustainable Development

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | புதுக்கோட்டை | காலம் : | 05/09/2018 | முதல் | 09/09/2018 |
| அறிக்கை எண் : | 070/ 2018 | வெளியீட்டு நாள் : | | 04/09/2018 | |

| கடந்த கால வானிலை 31/08/2018 முதல் 03/09/2018 வரை | |
|---|---|
| காரணிகள் | கடந்த கால வானிலை |
| மழை (மி.மீ) | 23.6 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 34-37 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 24-25 |
| மேக மூட்டம் | 6-7 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 30-77 |
| காற்றின் வேகம்(கி.மீ. / மணி) | 11-16 |

எதிர்பார்க்கப்படும் வானிலை ( 09-09-2017 8.30 மணி வரை )

| காரணிகள் | 05-09-2018 | 06-09-2018 | 07-09-2018 | 08-09-2018 | 09-09-2018 |
|---|---|---|---|---|---|
| | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
| மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0.5 | 0.5 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 37 | 37 | 38 | 37 | 37 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 26 | 27 | 27 | 27 | 27 |
| மேக மூட்டம் | 6 | 6 | 5 | 5 | 6 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 75 | 70 | 70 | 70 | 70 |
| குறைந்த பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 35 | 35 | 30 | 30 | 30 |
| காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 12 | 12 | 12 | 10 | 10 |
| காற்றின் திசை | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு |

**குறுஞ்செய்தி :**

வரும் செப்டம்பர் 8 மற்றும் 9ம் தேதிகளில் ஆங்காங்கே லேசான தூரலுக்கான வாய்ப்புள்ளது. வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 10 முதல் 12 கி.மீ வேகத்தில் மேற்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள் : வெண்டை & (கால்நடை)**

நிலவும் பருவச்சூழ்நிலையில் வெண்டை பயிரில் தத்துப்பூச்சியின் தாக்குதல் பரலாக தென்பட வாய்ப்பு உள்ளது. தாக்கப்பட்ட இளம் இலைகள் மஞ்சளாக மாறிவிடும், இலைகளின் ஓரங்கள் கீழ்நோக்கிச் சுருங்கி காணப்படும் அதன் உட்புறம் சிவப்பு நிறமாக மாறும். நாளடைவில் தாக்கப்பட்ட இலைகள் பழுப்பு மற்றும் சிவப்பு நிறமாக தோன்றி நெருப்பால் தீய்ந்தது போன்று நிறமாற்றம் பெறும். இலையை கசக்கும் பொழுது அதன் ஓரங்கள் பொடிபொடியாக நொறுங்கி விடும். செடிகளின் வளர்ச்சிக்குன்றி காணப்படும். இதனைக் கட்டுப்படுத்த ஒரு ஹெக்டேருக்கு (தெளித்திரவம் அளவு ஹெக்டேருக்கு 500 லிட்டர்) 500 மில்லி வேப்பம் கொட்டை வடிநீர் அல்லது 100 மி.லி இமிடாகுளோஃபிரிட் அல்லது 500 மி.லி மீதைல் டிமெட்டான் என்ற பூச்சிக்கொல்லிகளில் ஏதேனும் ஒன்றை தெளிக்கவேண்டும்.

வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளில் வெளிப்புற ஒட்டுண்ணிகளை நீக்க 2 மில்லி பூட்டாக்ஸ் மருந்தினை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து ஆடுகளின் வெளிப்புறங்களில் பூசவேண்டும்.